2594
XX.A37
I
R611-118
1250
ACC. NO.
2594

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

நான்காந் தொகுதி.

மகாமஹோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை 20.

பத்திராதிபன்:— பண்டித, ஆ. அரங்கராமாநுஜன்.

மதுரை,
ஹரிஸமயதிவாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

அக்ஷய-பிரபவ.
1927-1928.

ஸ்ரீ:

நான்காந்தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
'அருள்கொண்டாடு மடியவர்' வ்யாக்யானம்:-	ஸ்ரீ. உ. வே. வானமாமலைஐயங்கார் ஸ்வாமிகள் வானமாமலை	17, 4, 60, 91, 119, 157, 209, 229
ஆதிபரதன்:-	...	... 186
ஆலயம்:-	...	... 173
ஆழ்வார் உபதேசம்:-	...	... 236
உபாயமும் ப்ரபத்தியே:-	ஸ்ரீ. உ. வே. இராமாநுஜையங்கார் ஸ்வாமி சேரன்குளம்.	... 214
எம்பெருமானார் தரிசன ஸபையின் வருஷோத்ஸவம் (நாரணபுரம்.)		... 168
ஐயவினாக்கள்:-	ஸ்ரீ. உ. வே. இராமாநுஜையங்கார்ஸ்வாமி (சேரன்குளம்.)	... 21
கீதார்த்த ஸங்க்ரஹம்:-	ப. அ.	... 241
சீலம்:-	...	... 77
ஞானக்கலை:-	ப. அ.	... 99
திருமந்த்ரார்த்தாநுஸந்தானம்:-	,, ,,	52, 145
திருவடி உரைத்த அடையாளம்:-	,, ,,	... 214
[illegible]வாகரத்தின் நான்காவதாண்டு:-	,, ,,	... 1
[illegible]ந்தீராட்டல்:-	ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்கார்ஸ்வாமி திருவல்லிக்கேணி.	... 265
[illegible]ருமாள் கைங்கர்யநிதி:-	...	... 140
[illegible]ாடை:-	...	... 192
[illegible]ம்:-	...	... 25

நூற்றெட்டுத்திவ்யதேசஅகவல்:- இராமநாதபுரம் சதாவதானம்
முத்துஸ்வாமிஐயங்காரென்ற
அனந்தாழ்வான்ஸ்வாமி. ... 262

நைச்யாநுஸந்தாநம்:- 67

பன்மணித்திரள்:- ப. அ. 49, 73, 108, 152, 181, 201, 220

பிராட்டி அசோகவனத்திலிருப்பு:- 164

ப்ரஹ்மஸூத்திர பாஷ்ய வரலாறு:- 217

மங்கள வாழ்த்து:- ஸ்ரீ. உ. வே. திரு. கி. இராமாநுஜையங்
கார்ஸ்வாமி மதுரை. ... 44

மதிப்புரை:- 182

மதுரை ஸ்ரீசரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜஸபையின்
வருஷோத்ஸவம்:- ... 40

மஹாபாரதத்தாலறியப்படும் நீதிகள்:- ... 62, 104

முயற்சி:- 94

யக்ஷப்ரச்நம்:- 9, 121, 149, 169, 205, 225

ராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை:- ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள்
ஸ்வாமி காரப்பங்காடு. 4, 36, 57, 84, 115, 135,
159, 177, 232

ஸித்தோபாயம்:- ப. அ. ... 193

நான்காந்தொகுதியில் வெளியாகிய புஸ்தகபாரம்,
(திவ்யஸூரிசரிதம்):- 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13,
14, 15, 16. பாரங்கள்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ச.	அக்ஷய௵ தை௴	பகுதி க.
Vol 4.	*January & February 1927.*	No. 1.

திவாகரத்தின் நான்காவதாண்டு.

வையமகளையடிப்படுத்தாய்வையத்தார்
உய்யவுருவம்வெளிப்படுத்தாய்-வெய்ய
வடுந்திறலாழியரவணையாயென்று
நெடுந்தகைநின்னையேயாம்.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேச்வரனது பரமகிருபையால் நமது திவாகரத்தின் மூன்றாவதாண்டு இனிதுநிறைவேறி நான்காவதாண்டும் தொடங்குகிறது. இதுவரை இது, பல்லோரின் மனமாசறுத்து மதிநுட்பமுடையவராய் விளங்கச் செய்து வருதலைப் பலரும் பாராட்டக் கண்டு மகிழ்கிறோம்.

மதிப்புடையான் கைப்பட்ட மாணிக்கம் பெருவிலை பெறுவதுபோல ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருக்கின்ற காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி முதலான பெரியோரின் அரியபெரிய விஷயதானங்களைக் கொண்டுள்ளதினால் திவா[illegible]ம் இங்ஙனம் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தகைய உப[illegible]ஞ்செய்தவர்கட்குச் செயற்பாலதான கைமாறு யாதுளது?

இதுநிற்க; திவாகரம் மேன்மேலும் திகழ்ந்து வருவதில் தம் [illegible]டியைச்செலுத்துபவரும் உயிர்த்துணைவரும் மதிநுட்பம் [illegible]டைத்தவரும் வரையாது கொடுக்கும் வள்ளியோருமாகிய [illegible]பநாயக்கனூர் ஸ்ரீமாந் ஸ்ரீநிவாஸநாயுடவர்கள், சேலம்

*

ஸ்ரீமாந், தேசாயி அங்கண் செட்டியாரவர்கள், எங்கும் புகழ்பெற்ற மைசூர் ஸ்ரீ. உ. வே. ஆட்கொண்டவில்லி கோவிந்தாசார்யஸ்வாமியின் அருமைச்சிஷ்யருள் ஒருவராகிய (சேலம் செவ்வாய்ப் பேட்டை) வக்கீல் ஸ்ரீமாந் குமாரசாமி செட்டியாரவர்கள், குமாரலிங்கம் ஸ்ரீமாந் M. திருவேங்கடராமாநுஜதாஸரவர்கள் என்ற இவர்களின் உபகாரமும், ஏனையஜீவித சந்தாதார்களின் உபகாரமும் திவாகரம் விர்த்தியடைவதற்கு அறிகுறியாயிருப்பதோடு எமக்குப் பெரிதும் ஊக்கத்தையும் விளைவிக்கின்றன. யாரும் தம் நலத்தையே நாடிச் செல்லும் இக்காலத்தில் இவர்கள் இப்பொதுதர்மத்திற் செய்த உபகாரம் மிகவும் பாராட்டத்தக்கதே.

நம்ஆழ்வாராசார்யர்கள் நம்மை நல்வழியிலுய்க்க அருளிச் செய்த ப்ரபந்த ரஹஸ்யவ்யாக்யானங்களின் ஆழ்பொருளைப் பலருக்கும் அறிவித்தலாகிய திருத்தொண்டை மேற்கொண்ட நமது திவாகரத்தை ஆஸ்திகஸமூகம் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டதாகுமன்றோ!

இங்ஙனம் ஆஸ்திகஸமூகம் தனது கடமையைச் செய்ய முற்படுமாகில் நமதுதிவாகரம் தனக்கு அங்கமாக ஓர் பாடசாலையுடன் யாதொரு இடையீடின்றி என்றும் நிலைபெற்று விளங்குவதற்குப் போதிய விமுநிதியைப் பெறுவதும் அரிதாமோ?

நம்பூர்வாசார்யர்கள் நமது ஸமயம் முன்னேற்றமடையச் செய்தற்கு என்னபாடுபட்டனரென்பதை யாவருமறிவர். இவர்களால் பெரிதும் போற்றப்பெற்ற நமது ஸமயம் இப்பொழுது பொலிவின்றி மறைவுற்றிருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ? இங்ஙன மிருப்பதைக்கண்டும் அதை நன்னிலையில் நிறுவச் செ[illegible] தற்கு முயலாதிருக்கிற நமக்கு இதனினும் துன்பமானசெ[illegible] வேறுயாதுளது? ஸமயத்தை வாழச்செய்தன்றோ அதைக் கை[illegible] பிடித்தொழுகுகின்ற நாம் வாழவேண்டும். இவ்வாழ்வில் கண்[illegible] கம் சிறிதுமில்லாது வாளா வாழ்நாளைக் கழிக்கின்ற நமது [illegible] ருந்த வாறென்னே! இனியாவது இத்தொண்டு புரிதற்கு ந[illegible] கள் முற்படுவாராக.

இதுவரை நமது திவாகரத்திற்கு ஸம்ரக்ஷகராகச் சேர்ந்தவர் நால்வரும், போஷகராகச் சேர்ந்தார் ஒருவரும், ஜீவிதசந்தாதார்களாக சேர்ந்தவர் ஐம்பத்தெண்மருமாவார்கள். இதுபோலப் பலரும் சேர்ந்து இன்னும் அதிகமாக உபகரிப்பார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது.

மூவாண்டு முடிவாகச் சந்தாதார்களால் யாதொரு பிரயோஜனத்தையும் திவாகரமடையவில்லை. அதுவும் விசனிக்கத்தக்க தொன்றாம்.

இஃதொருபுறமிருக்க; குலசேகராழ்வார் 'பிறர்பொருளை எம்பெருமானுடைய மெய்யடியார்கள் கொள்ளார்' என்று குடப்பாம்பிற்கையிட்டு உறுதிகூறினரென்ற மெய்யுரையை மேற்கொண்டு முன்பணம் பெறாமல் பலசந்தாதார்கட்குத் திவாகரம் அனுப்பப் பட்டது. சந்தாதார்களில் ஒரு சிலர் ஒருவருஷகாலம்வரை பத்திரிகைகளைப் பெற்றுப் பின் வி. பி. யைத்திருப்பிவிட்டுப் பெரிதும் நஷ்டத்தை விளைவித்தனர். இவர்கள் 'பத்திரிகையை ஆதரிக்கிறோம்' என்று முன்வருவதிலும் வாளாவிருப்பரேல் அதுவே பெரிதும் நன்மை செய்யப்பட்டதாமன்றோ!

இனி, நான்காவதாண்டு தொடக்கமாகிய இப் புதுவருஷத்தில் இன்னும் வேண்டிய அளவில் சீர்திருத்தங்களுடன் நமது திவாகரம் பிரகாசமுற்று எல்லோரையும் மகிழ்விக்குமென்று கருதுகிறோம். திவாகரம் பொதுநலத்தை முன்னிட்டே தோன்றி உலவுகின்றதினால் இதை ஆதரிப்பார் கல்விப்பயனோடு அறப்பயனையும் ஒருங்கெய்தப் பெற்றவராவர். ஆதலால் இப்பொழுது ஆதரித்து வருகிற சந்தாதார்கள் தங்களாலியன்றவரை சந்தாதார்களைச் சேர்த்து உதவிபுரியப் பன்முறையும் வேண்டுகிறோம்.

ப-அ

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை.

[இது, காரப்பங்காடு உபயவேதாந்தவித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(3-வது தொகுதி 345-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதையனுஸரித்து ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில், ‘‘𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾 𑌗𑌤𑌿𑌃’’ ‘‘முக்தாநாம் பரமாகதி:’’ என்கிற நாமவ்யாக்யானவஸரத்தில், ‘‘𑌪𑌰𑌮𑍇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑍇𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌕𑍇𑌷𑌾𑌂𑌚𑌿𑌦𑌰𑍍𑌵𑌾𑌚𑍀𑌨𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 𑌇𑌯𑌤𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 ‘𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌮𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑌤𑌨𑍍𑌤𑌿𑌯𑍇’ 𑌇𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂𑌚 𑌸𑌂𑌸𑌾𑌰 𑌪𑌰𑌮𑌪𑌦𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇’’ பரமேதி விசேஷணேந முக்தாநாமேவ கேஷாம்சித் அர்வாசிநாகதி: கம்யதே, இயதேச நிர்முக்தஜராமரணாத்மக கைவல்ய லக்ஷணா ‘‘ஜராமரண மோக்ஷாய மாமாச்ருத்ய யதந்தியே’’ இதி தேஷாம் ஸ்தாநம்ச ஸம்ஸார பரமபத யோர்மத்யே’’ என்று சொல்லியிருக்கிறது. ‘𑌸𑌂𑌸𑌾𑌰 𑌪𑌰𑌮𑌪𑌦𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇’, ‘‘ஸம்ஸார பரமபதயோர் மத்யே’’ என்கிற இடத்தில் பரமபத சப்தமானது ஜ்ஞானிகளுக்கு அநுபாவ்யமான தேசவிசேஷத்தைச் சொல்லுகிறது. ‘‘𑌵𑌿𑌰𑌜𑌾 𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑍋𑌃 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂’’ ‘‘விரஜா பரமவ்யோம்நோ: அந்தரம் கேவலம் ஸ்ம்ருதம்’’ என்கிற வசனத்தில் பரமவ்யோம சப்தமும் ஜ்ஞானிகளுக்கு அநுபாவ்யமான தேசவிசேஷ பரமாயுள்ளது. அப்படிக் கொள்ளாமல் பரமவ்யோம சப்தம் நித்யவிபூதிஸாமாந்யபரமாகவே கொள்ளும் பக்ஷத்தில், மேல் ஜ்ஞானிகளுக்கு ப்ராப்யமான தேசவிசேஷத்தை ப்ரதிபாதிக்கிற வாக்கியங்களோடு விரோதிக்கும்.

இப்படியே ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் ப்ரதமாம்சத்தில் இருபத்திரண்டாவது அத்யாயத்தில் ‘‘𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌷𑍁’’ ‘‘ஸர்க்க ஸ்தித்யந்த காலேஷு’’ என்கிற சுலோகத்தில், ‘‘பரமம்,

பதம், தஸ்ய அகுணம், மஹத்” என்று தொடங்கி, ‘தத்ப்ரஹ்ம பரமம்யோகி’ இத்யாதி சுலோகங்களுடைய முடிவில் ‘ஆத்மயோகி, என்கிற கேவலனுக்கும், பகவத்யோகிக்கும் ஸ்தான விசேஷத்தை ப்ரதிபாதிக்கிறவிடத்தில், பரமம், அகுணம், மஹத், என்று ‘பரம’ சப்தத்தாலே சதுர்முகப்ரஹ்மலோகத்துக்கு மேற்பட்டதென்றும், ‘மஹத்’ என்கிற சப்தத்தாலே ப்ரகிருதிக்கு மேற்பட்டதென்றும், ‘அகுணம்’ என்பதனால் குணத்ரயரஹிதமென்றும் சொல்லி, அதற்குமேலுள்ள சுலோகத்தில், “தத்ராநந்யஜ்ஞாநெரா யெ_ந யொகிநொ யாந்தி யெ லயம் ஸம்ஸார கஷணொத்வா தெ யாந்தி நிர்பீஜதாம்த்விஜ” “தத்ராந்ய ஜ்ஞாநமோதேந யோகினோ யாந்தி யே லயம், ஸம்ஸார கர்ஷணோத்பாதே யாந்தி நிர்பீஜ தாம் த்விஜ”, என்கிற சுலோகத்தில் ‘தத்ர’ என்று பூர்வோக்தமான பரிசுத்தாத்மஸ்வரூபத்தில் லயத்தை அடைந்திருக்கிற கேவலர்களானயோகிகளுக்குத் திரும்பியும் ஸம்சாரத்திற்குபீஜமான ப்ரகிருதிஸம்பந்தத்தினுடைய நிவ்ருத்தியை உபபாதித்து புநராவ்ருத்தியில்லாமையை நிரூபித்திருக்கிறது.

இதன் வியாக்யாதாவான எங்களாழ்வான் இந்த சுலோகங்களுக்கு வியாக்யானம் பண்ணுகிற இடத்தில், “கேவலனுக்கு ப்ராப்யமான பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தையும், ஜ்ஞானிக்கு ப்ராப்யமான பகவத்ஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கிறதென்று அருளிச்செய்திருக்கிறார். அந்த வ்யாக்யானத்தில், பரமம், பதம், தஸ்ய அகுணம் மஹத் என்கிற இடத்தில், பரமம்-விரிஞ்சாதிபதாத், அகுணம்-குணமயப்ரகிருதிவியுக்தம், மஹத்- அவ்யக்தாத், பத்யதஇதி பதம், முக்தஸ்வரூபம் ததபிபரமாத்மாந: ஸ்வரூபமித்யந்வய:” என்று ஸ்பஷ்டமாக நிரூபித்திருக்கிறார்.

இப்படியே ப்ரஹத்ப்ருஹ்மஸம்ஹிதையில், “ஸம்ஸாரவ்யாவயஶ்ரணம் உவாய வெமத்வ, ஷொஜ்ஞாகாரிணொ ஹரிகா ஹ்யாஜீவம் ஸ்வாக்ருஶாம்தநம், ஹிகாரஞ்கா யெ ஹவந்தி ஷியா வெ ஸ்வகீத்ஷதாஃ, கெவலா ஷெவகாஶ்ருதி கெவலாஸ்நவ ஜீஷதாஃ, வலவம் ஊகா ஹொலெவீ உலொகெ விஶஷிஹி,

மாமேவ ஶரணம் யாதா: ஸர்வபாபேவ ஸிந்துஜே, அதீதா து ஸ்தராம் மாயாம் கேவலா ஸேவகாஸ்ததா, பஹவோ மத்பதம் ப்ராப்தா ஸேவகா ஸேவ்யா மம, கமநாகமநைர் முக்தா: கேவலாஸ்து பவந்தி ஹி'' "ஸம்ப்ராப்யாசார்ய சரணம் உபாய மவகத்ய ச, மதாஜ்ஞாகாரிணோ பூத்வா ஹ்யபாஜீவம் ப்ராகிருதாம்தநும், ஹித்வா முக்தாபேபவந்தி த்விவிதாஸ்தேப்ரகீர்த்திதா:, கேவலாஸ் ஸேவகாச் சேதி கேவலாஸ் தநுவர்ஜிதா:, ஏவம்முக்தா மஹாதேவி மமலோகே விசந்திஹி, மாமேவ சரணம் யாதா: ஸர்வபாநவே, ஸிந்துஜே, அதீதா துஸ்தராம் மாயாம் கேவலாஸ் ஸேவகா ஹி வா, பஹவோ மத்பதம் ப்ராப்தா: ஸேவகா: ஸேவ்யா மம, கமநாகமநை: முக்தா: கேவலாஸ்து பவந்திஹி'' என்று சொல்லியிருக்கிறது. இதன் அர்த்தம்—"ஆசார்யனை ஆசிரயித்து, உபாயத்தை அறிந்து என்னுடைய ஆக்ஞையை நடத்துகிறவர்களாய் ப்ராகிருத சரீரத்தை விட்டு முக்தராவார்கள். அந்த முக்தர்களும் கேவலர்களென்றும் ஸேவகர்களென்றும் இரண்டு வகையாயிருப்பர்கள். அவர்களில் ஸேவகர்கள் என்னுடைய ஸேவையாலே என்னுடைய ஸ்தானத்தை அடைவார்கள். கேவலர்கள் அசரீரிகளாய் கெமநாகமனங்களில்லாம லிருப்பர்கள்'' என்பதாம். இதனால், கேவலர்களுக்குப் புநராவ்ருத்தி யில்லையென்றும், ப்ரகிருதி மண்டலத்துக்கு பஹிர்ப்பூதமான நித்யவிபூதியி லேகதேசம் அவர்களுடைய ஸ்தானமென்றும் விளங்குகிறது.

இப்படியே திருவாய்மொழியின் முகப்பத்தில், இரண்டாந் திருவாய்மொழியில் ஐந்தாவது பாட்டில், "அற்றது பற்றெனி, லுற்றது வீடுயிர், செற்றதுமன்னுறில், அற்றிறை பற்றே'' என்கிற இடத்தில், "விஷயஸங்கநிவ்ருத்தமானல், சேதனன் மோக்ஷத்தை யடைகிறன்; அதைவிட்டு மேலான பகவத்ப்ராப்திரூப புருஷார்த்தத்தில் நிலைநிற்கவேண்டியிருந்தால் ஸ்வாமியான ஈசுவரனைப்பற்றவேணும்'' என்று சொல்லியிருக்கிறது. இத்தால் விஷயஸங்கநிவ்ருத்தியே மோக்ஷமென்றும், அதைக்காட்டில்மேலான மோக்ஷம் பகவத்ப்ராப்தியென்றும் விளங்குகிறது. ஆனல் மன்னுறில் என்கிறவிடத்தில் நித்யத்வத்தைச் சொல்லுகிறபடியால் கைவல்யம் அநித்யமென்று ஏற்படாதோவென்னில்? உபக்கிரமத்தில் உற்றது வீடுயிர் என்று கை

வல்யத்தை மோக்ஷமாகச் சொல்லியிருப்பதால், மோக்ஷமென்பது நித்தியமாயிருப்பதாதலால் அதற்கு விருத்தமான அநித்யத்துவம் கொள்ளக்கூடாது. ஆதலால் 'மன்' என்னும் நாநார்த்தவாசகம் மிகுதி என்னும் அதிசயார்த்தகமாயு மிருப்பதுபற்றி, மன்னுறில் என்கிறவிடத்தில், இதனின் மிக்கதான புருஷார்த்தத்தில் நிலைநிற்க வேண்டியிருந்தால், என்று அர்த்தம் கொள்ளவேணும்.

மேலும் திருவாய்மொழியில் அநேகஸ்தலங்களில் கைவல்யம் நித்தியமென்றே ஏற்படுகிறபடியால் அதற்கு விருத்தமாக அர்த்தம் சொல்லுவது அநுபபந்நம். ஒரேக்கிருந்தத்தில் பூர்வாபர கிருந்தங்களுக்கு விரோதமில்லாமல் நிர்ணயிக்கப்படுமதான அர்த்தமே ஸங்கதமாகும். அப்படியன்றியிலே நாநார்த்தவாசகமான 'மன்' என்னும் சப்தத்துக்கு ஸ்தலாந்தரங்களிற் சொல்லும் நித்யார்த்தத்தை இங்கும்கொண்டு அர்த்த நிர்ணயம்பண்ணுவது பூர்வாபரவிருத்தமாகையாலே அஸங்கதமாயிருப்பதால் சிரேஷ்டார்த்தமே இங்கு கொள்ளத்தக்கது.

இன்னும், முதற்பத்து ஏழாந்திருவாய்மொழி முதற்பாட்டில், "துறவிச் சுடர்விளக்கம் தலைப்பெய்வார்" என்கிறவிடத்தில், "துறவி-பரகிருதிவியுக்தமான, சுடர்விளக்கம்-ஜ்ஞாநஸ்வரூபமாயும், ஜ்ஞாநாசிரயமாயுமுள்ள ஆத்மாவை, தலைப்பெய்வார்-அடைய வேண்டியிருக்கிறவர்கள்" என்று பிரகிருதிவியுக்தாத்மஸ்வரூபமே கேவலர்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.

நாலாம்பத்தில் முதல் திருவாய்மொழி 'குறுகமிக' என்கிற பாட்டிற்கு வியாக்கியானமான ஆறாயிரப்படியில், "அஸ்திரத்வாதி தோஷா ஸம்பின்னமான கைவல்யத்தை ப்ராப்யமாகப் பற்றினலோவென்னில் ப்ராகிருதவிஷயவைராக்ய பூர்வகமாக ஜ்ஞானயோக நிஷ்டனானவனுக்கும் எம்பெருமானை ஆசிரயித்தாலல்லது ஆத்மாவலோகந விரோதிகர்மம் போகாது; பகவத்ஸமாசிரயணத்தாலே ஆத்மாவலோகனம் பிறப்பது. பிறந்தாலும் அந்திமதெசையில் பகவதநுஸந்தாநம்பண்ணி ப்ரதிபந்தகத்தைப் போக்காதொழியில் பின்னை, ஆத்ம யாதாத்ம்யாவிர்ப்பாவலக்ஷண மோக்ஷம் ஸித்தியாது. முக்ய

மோக்ஷமாகிறதும் அந்த பகவத் கைங்கர்யமே" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இத்தாலும் கைவல்யம் ஸ்திரமென்றும், அந்த கைவல்யமும் ஆத்மயாதாத்ம்யாவிர்ப்பாவரூபமான மோக்ஷமென்றும் ஏற்படுகிறது. ஆதலால் பகவத் கைங்கர்யம் முக்ய மோக்ஷமென்றும் கைவல்யம் அமுக்ய மோக்ஷமென்றும் ஏற்படுகிறது.

'இறுகலிறப்பென்னும் ஞானிக்கு' என்கிற விடத்தில் 'ஸங்கோசரூபமான கைவல்யத்தை மோக்ஷமென்று அபிமானிக்கிற ஜ்ஞானிக்கு' என்று அர்த்தம் ஏற்படுகிறபடியால், வஸ்துத: கைவல்யம் மோக்ஷமன்று என்று சில ஆதுநிகர்கள் சொல்லுவது ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஜ்ஞானபுத்ரரான திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்த ஸூக்திக்கு விருத்தமாகையால் அநாதரணீயம்.

கைவல்யம் ஸ்திரமென்று சொல்லுவது, "வாயுஶ்சாந்தரிக்ஷஞ்சைதத³ம்ருதம்" "வாயு: சாந்தரிக்ஷஞ்ச ஏததம்ருதம்" என்பதுபோல சிரகாலஸ்தாயித்வத்தைச் சொல்லுகிறது என்னுமதுவும் அநுபபந்நம். கீழ் ஐசுவரியத்தை ப்ரஸ்தாவித்து அந்த ஐசுவரியம் அஸ்திரமாகையால் அதை அபேக்ஷித்து இதை ஸ்திரமென்று சொல்லியிருப்பதால் ஐசுவரியத்துக்குமேலெல்லையான அண்டாதிபத்தியம் ப்ருஹ்மகல்ப பரியந்தமிருப்பதால் அதற்குமேலான ஸ்தைர்யம் சிரகாலஸ்தாயித்வ ரூபகமாகாது. மேலும் கைவல்யஸ்தாநம் ஸநகஸநந்தநாதி யோகிகளுக்கு ஸ்தானமான ஜநோலோகம் என்று ரஹஸ்யத்ரயஸாரமுதலான கிரந்தங்களிலிருப்பதால், ப்ருஹ்மலோகத்துக்குக் கீழ்ப்பட்ட தபோலோகத்துக்கும் கீழ்ப்பட்டதாகையால் ஐசுவர்யத்துக்கு மேலெல்லையான அண்டாதிபத்யத்தைக் காட்டிலும், இது சிரகாலஸ்தாயியென்று சொல்லுமதும் அத்தியந்தாநுபபந்நம்.

மேலும், "வாயுஶ்சாம்ருதஞ்ச" "வாயு:சாம்ருதஞ்ச" என்கிற வாக்கியத்தில் அம்ருதசப்தம் அந்யத்ரவாய்வந்தரிக்ஷாதிகளுக்குச் சொல்லுகிற அநித்யத்வத்துக்கு விருத்தமான நித்யத்வத்தை ப்ரதிபாதிப்பது கூடாமையால் சிரகாலஸ்தாயித்வபரமாகச் சொல்லவேணும். அப்படி இவ்விடத்தில் கைவல்யம் அநித்யமென்கிற ப்ரமாணமில்லாமையால் ஸ்வாரஸிகமான அர்த்தத்தை விட்டு கௌணார்த்த கல்பநம் பண்ணுவதும் அநுபபந்நம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

யக்ஷ ப்ரச்நம்.

அறம் பொருளின்பம் வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களை யாவராலும் விரும்பியடையப்படும் தன்மையினவாய் விளங்கும். இவற்றுள் அறம் ஒன்றே பொருளின்பங்கட்கும், வீட்டிற்கும், முதற்காரணமாயிருக்கும். இத்தகைய அறத்தினது உண்மையான முடிவுகளை ப்ரத்யக்ஷத்தினாலும், அநுமானத்தினாலும் தெரிந்து கொள்ள இயலாது. ஆகமப்ரமாணத்தையும், பெரியோர்களது ஒழுக்கத்தையுங்கொண்டே இதன்உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். இதனாலன்றோ "வேதமும் ஸ்மிருதியும்இவற்றை அறிந்தோர்களது ஒழுக்கமும் தர்மத்திற்குமூலமாம்" என்று ஸ்மிருதியிற் செவ்வனே சொல்லப்பட்டுளது. ஆகமமாவது-சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸபுராணங்களாம். இவற்றுள் சுருதியும், ஸ்மிருதியும் அரசனதாணைபோல நியமித்துச் செல்கின்றனவாதலால் அவை நுண்ணறிவுடைய ஒருசிலர்க்கேயன்றி யாவர்க்கும் பயன் படுவதில்லை.

இக்குறைபகற்றுதற்கே இதிஹாஸ புராணங்கள் எழுந்தன. இவைகளுள் "பாரத: பஞ்சமோவேத:" என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற மஹாபாரதத்தை அறியாதார் நம்பாரதகண்டத்திலிரார். இப்பாரதத்திற் பெரும்பாலும் சரித்திர ரூபமாகக் காணப்பட்டாலும் இது, சரித்திரங்களை அடிப்படையாகக்கொண்டே கம்நோக்கத்தை நிறைவேற்றிச் செல்கிறது. எவ்வாறெனின்; நற்குண நற்செய்கைகளையுடைய ஒருவன் முடிவில் நற்பயனெய்தும் திறத்தை வர்ணிக்குமாற்றாலும், இதற்கு மாறுபஒருவன் அதற்குரிய பயன் அடைவதை வர்ணிக்கும் வகையாலும், ஒருவர்க்கொருவர் உபதேசஞ் செய்யுமுறையாலும், வினாவிடையாகக் கூறுமுகத்தானும் அறத்தையே இது முழுநோக்காகக் கொண்டுளதென்பதைத் தெளிவாக அறியலாம். அப்பாரதத்தின் ஒருசிறு பகுதியாகிய இந்த யக்ஷப்ரச்னத்திலும் பலஅரியபெரிய தர்மக்கூறுபாடுகள் அறியக்கிடக்கின்றமையால் இவைஇங்கு முறைப்படுத்தி எழுதப்பெறுகின்

றனை, இந்த ப்ரச்னத்தைத் தெரிந்து கொள்வதற்கு முன்னரே இக்கதையின் தொடர்பை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாதலால் அதுவும் இங்குச் சுருக்கமாக உரைக்கப்படும்.

பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்து வருகிற காலத்தில் ஆங்காங்கு ரிஷிகளின் ஆச்ரமத்தில் தங்கி அவர்களால் உபசரிக்கப் பெற்றவர்களாய், கடைசியாகக் காம்யவனத்தை அடைந்தனர். அப்பொழுது இவர்கள் வனத்தில் வஸிக்கவேண்டிய பன்னிரண்டுவருஷங்களும் ஒருவாறு பூர்த்திபெற்று, மேல் அஜ்ஞாதவாஸம் செய்தற்குரியகாலமும் சமீபித்தது. அதுசமயம் தருமதேவதை இவர்களது அஜ்ஞாதவாஸத்திற்குத் தகுதியான ஓர்இருக்கை அமைத்துத் தரவும் இவர்களது நிலைமையைப் பரிசோதிக்கவும் கருதி ஒருமான் வடிவம் கொண்டு ஒருமஹரிஷியின் பர்ணசாலையின் சமீபத்தில் மற்றொரு மானேடு சண்டைசெய்வதுபோல நடித்து மஹரிஷியின் யாகத்திற்கு உபயோகமான அரணிக்கட்டையைக் கொம்பாலே தூக்கிச்சென்றது.

அப்பொழுது மஹரிஷி அக்கட்டையை மீட்டிக்கொள்ள முயன்றும் மான்அவர் கண்ணுக்குத் தோன்றாமல் ஓடிவிட்டது. அதன்பின் மஹரிஷி யாகாக்நியை உற்பத்திசெய்தற்குரிய அக்கட்டை இல்லாததினால் வேள்விசெய்தற்கு வழியில்லாமல் வருந்தித் தருமபுத்திரரிடம்வந்து அரணிக்கட்டையை மீட்டிக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். பஞ்சபாண்டவர்கள் மஹரிஷியின் வாக்யபரிபாலனம் செய்யக்கருதி காட்டிடமெல்லாம் மானைத் தேடினார்கள். அது இவர்கள் கண்ணிற்குப் புலப்படவில்லை. இவர்களும் மிக்கக் களைப்படைந்து அருகிலுள்ள ஓர் ஆலமரநிழலில் வந்தமர்ந்தனர்.

அதுசமயம் இவர்கட்கு ஒரு பொழுதும் உண்டாகாத நீர் வேட்கை அதிகரிக்க வீமன் எழுந்துநின்று தருமபுத்திரரை நோக்கி அண்ணா! நமது பாஞ்சாலியை ஸபையில்கொணர்ந்து பரிபவப்படுத்திய மஹா பாபியாகிய துர்யோதனனை இன்னும் கொல்லவில்லையே. இனி இக்காரியம் நிறைவேறுகிற விஷயத்தில் எனக்கு ஐயமே நிகழ்கிறதென்றான். உடனே அருச்சுனன் எழுந்து அண்ணா! அக்காலத்துக் கடுஞ்சொல்லைப் புகன்ற அந்தத்தேரோட்டியின் மக

ளைக்கொல்வேனென்று வஞ்சினங்கூறிய எனதுரையும் பொய்த்துவிடுமோ என்று சந்தேகிக்கிறேனென்றான். அவ்வாறே ஸகதேவன் எழுந்து அண்ணா! தேவரீரைச் சூதினால் வென்ற வஞ்சகமுடைய பாபியாகிய சகுனியை இனியான் எங்ஙனம் கொல்வேன்; என்றான்.

இவ்வுரைகளைக்கேட்ட தருமபுத்திரர் நகுலனை யழைத்து நம் சகோதரர்கள் நீர்வேட்கையால் பீடிக்கப்பெற்றுமிகவும்வருந்துகிறார்கள். ஆதலால் நீ இந்த ஆலவிருக்ஷத்தின்மேலேறி ஜலமிருக்குமிடம் எவ்விடத்திலாவது தோற்றுகிறதா என்பதை நன்றாய் ஆராய்ந்து பார்ப்பாய் என்றார். அவனும் அங்ஙனமே அவ்விருக்ஷத்தின்மீதேறி பலதிக்குகளையும் நோக்கினான். அப்பொழுது சமீபத்தில் ஓர்நீர்நிலை இருப்பதாக இவன்கண்ணுக்குப் புலனாயிற்று. உடனே தருமபுத்திரரிடத்தில் தெரிவித்தான். தருமபுத்திரர் நகுலா! நீ விரைவிற்சென்று தண்ணீர்முகந்து வருவாயென்று ஆணையிட்டார். நகுலனும் அவ்வுரையை மேற்கொண்டு தான்குறித்தவிடத்தை நாடிச்சென்றான், அவ்விடத்தில், அன்னப்பறவை நின்று விளையாடிக் கொண்டிருக்கும் அதிமனோஹரமான ஓர் நீர் நிலையைக்கண்ணுற்று அடங்காமகிழ்ச்சியுடன் அதிலிறங்கி நீர்பருகலுற்றான்.

அப்பொழுது யக்ஷவடிவந்தாங்கி நின்ற தர்மதேவதை நகுலன் செவிப்பட ஐயனே! 'ஆராயாமல் ஒருகார்யத்தைச்செய்து வீணை பழிபடைத்துக் கொள்ளற்க. இந்தஓடைஎனக்கு எவ்வகையாலும் சொந்தமானது. ஆதலால் நான்கேட்கிற வினாக்களுக்கெல்லாம் தக்கவிடையளித்த பின்னரே இந்நீரைப் பருகுதற்கும், முகந்து கொண்டு செல்லுதற்கும் நீஉரியவனாவாய்' என்றது. நகுலன் தனக்குள்ளநீர்வேட்கைக்கு ஆற்றாது யக்ஷனின் சொற்களையும் பொருட்படுத்தாமல் நீரைப்பருகி மூர்ச்சையடைந்து தரையிற்சாய்ந்தான்.

நகுலன் வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருந்த தருமபுத்ரர் நெடுநேரமாகியும் அவன் வராமை கண்டு மனக்கவலைகொண்டு ஸஹதேவனையழைத்து நகுலன் இன்னம் இங்குவராமைக்குக் காரணம் தெரியவில்லை. ஆதலால் நீவிரைவிற்சென்று அவனையும் அழைத்து நீரையும் முகந்து வருவாய் என்றார். ஸஹதேவன்

விரைந்து சென்று நீர்நிலையின் கரையில் நகுலன் மூர்ச்சித்துக்கிடக்கும் நிலைகண்டு மனக்கவலைகொண்டு நீர்வேட்கையால் நீர்நிலையில் இறங்கி நீர்பருகத்தொடங்குகையில் முன்போலவே யக்ஷனுடைய சொற்கள் இவன் செவியிலும் பட்டன. அவற்றையும் ஒருபொருட்படுத்தாது நீரைப்பருகி நகுலனைப்போல மூர்ச்சித்துவிழுந்தான்.

யுதிஷ்டிரர் இதென்ன விந்தையாயிருக்கிறது நகுலனைத் தேடச்சென்ற ஸஹதேவனும் இன்னும் வரவில்லையே. என்செய்வதென்று அருச்சுனனையழைத்து நீ நம்ஸஹோதரர் இருவரையுங் கூட்டிக்கொண்டு நீரையும்முகந்துவருவாய் என்றுகட்டளையிட்டார். அருச்சுனனும் யக்ஷனிருக்கும் வாவியிடத்துவந்து தம்செபலற்றுத் தரையிற் கிடக்கும் சகோதரர்கள் இருவரையுங்கண்டு இச்செயல் எவரது சூழ்ச்சியால் நிகழ்ந்ததோவென்று நாற்புறமும் சுற்றிப்பார்த்தவிடத்திலும் அவன்கண்ணுக்கு ஒன்றும் புலனாயிற்றில்லை நீர்வேட்கையை ஒழித்துக்கொண்டு பின் இதன்விவரத்தை ஆராய்வோமென்று நீரில்இறங்கி நீரைப்பருகத் தொடங்கினான் அப்பொழுதும் யக்ஷனுடைய தடைச்சொற்கள் இவன்செவியிற்புகுந்தன. இச்சொற்களைச் சொல்கின்றவன்யார்? எவனாயிருக்கினும் இனி, இதுபோல மறைந்துநின்று ஒன்றும்சொல்லவேண்டா என்று சப்தவேதம் (ஒலியைத்தேடிச்செல்லும்பாணம்) என்றபாணத்தைப் பொழிந்தான். அப்பொழுது நீ இதுபோன்ற பலபாணங்களைப் பொழிந்தாலும் ஒருபயனையும் அடையமாட்டாய் எனது வினாக்களுக்கு ஏற்றவிடையளித்துப் பின்வேறுகாரியங்களில் முயற்சிப்பாய்; என்று யக்ஷஸ் மறுமுறையும் சொல்லியது. அருச்சுனன் நீர்வேட்கையின் மிகுதியால் அவ்வுரைகளைச் சிறிதும்பொருட்படுத்தாது நீரைப்பருகி மூர்ச்சித்துவிழுந்தான்.

தருமபுத்திரர், வீமனைஅழைத்து இஃதென்னமாயம்! இத்தகைய சம்பவங்களை நாம் இதுவரையுங் கண்டோமில்லை. ஒருவர்பின் ஒருவராகச் சென்ற நம்தம்பிமார் மூவரையும் இதுவரையுங் காணோம்; அவர்களின்நிலைமை இன்னதென்பதும் தோன்றவில்லை. ஆதலால்நீ விரைவிற்சென்று ஆராய்ந்து வருவாய்;என்று விடையளித்தார். வீமனும் தடாகத்தைக் கிட்டி உயிர் நீத்துக்கிடக்கும் தம்

பியர்மூவரையும் கண்டு அடங்காத் துக்கங்கொண்டு இச்செயல் இராக்ஷஸர்களால் நிகழ்ந்திருக்கவேண்டும்; எவ்வாறாவது அவர்களோடு போர்செய்து இதன்முடிவைத் தெரிந்துகொள்வோமென்று நீர்வேட்கையைத் தணித்துக்கொள்வதற்கு நீரையெடுத்துப் பருகத்தொடங்குகையில், முன்போலவே யக்ஷனுடைய சொற்கள் இவனுடைய செவியிலும் விழுந்தன. அச்சொற்களைக் காற்கடைக்கொண்டு நீரைப்பருகி மூர்ச்சையடைந்து விழுந்தான்.

பின்பு தருமபுத்திரர் இஃதோர் கெட்டஸம்பவம் நிகழ்ந்தது போலும். வனமே யெரிந்துவிட்டதோ? நீர்இருக்குமிடந்தெரியாது திகைக்கின்றனரோ? அல்லது இறந்துபட்டனரோ? இன்றேல் போர்புரியாதாரிடம் போர்புரிந்து சாபம் அடைந்தனரோ? ஒன்றும் தெரியவில்லையே என்று தமக்குட் கருதித் தம்பியர் யாண்டுள்ளார்களென்று பலவிடங்களையும் ஆராய்ந்து தம்பியரிருக்குமிடம்வந்து நால்வரும் உயிர்நீத்துக்கிடப்பதைக் கண்டார். அளவிடவொண்ணாத துக்கக்கடலில்ஆழ்ந்து வீமனைத் தொட்டு வீமசேனா! நீ மஹாபாபியாகிய துர்யோதனனுடைய தொடைகளைப்பிளந்து அவனது உயிரைப் பருகுகிறேனென்று வஞ்சினங்கூறினையே; அவ்வுரைபொய்த்ததோ? உன்உயிரை வவ்வுவாறு முண்டோ? அருச்சுனா! நீ வீரரால் புகழப்பட்ட விறபடைத்த செல்வனாய் விளங்கினையன்றோ! உன்னால் வெல்லக்கூடாதவீரர் உலகில் உளரோ? கூற்றுவனும் உன்னுயிரைக்கொள்ளக் கூசுவனன்றோ! சிறுவர்களான நகுல ஸஹதேவர்களே! நீங்களும் இத்தன்மை அடைந்தீர்களோ? இனி உங்களைவிட்டு எவ்வாறு உயிர்வாழப்போகிறேன். நீங்கள் என்னிடத்திலும், தாய் குந்திதேவியிடத்திலும், த்ரௌபதிமீதிலும் அருளற்று எவ்வாறு உயிர்நீத்தீர்கள். நம் தாயாகிய குந்திதேவி உன் தம்பிமார்கள் எங்கே யென்று அன்போடு கேட்டால் யான் யாது புகல்வன். அந்தோ! அந்தோ! என்று வாய்விட்டலற்றிப் புலம்பினார். பின் தம்பிமார்களின் சரீரங்களை நன்றாய் ஆராய்ந்து பார்த்தார். அவர்கள் சரீரத்தில் யாதொரு படைக்கலமும் தைத்ததாகத் தோற்றவில்லை. அவர்களின் முகங்களின் ஒளிகளும் குன்றவில்லை. இவர்கள், துர்யோதனாதியரின் சூழ்ச்சியால் உயிர்

துறந்தனரோ? அல்லது இத்தடாகத்திலுள்ள நீரைப்பருகிய தோஷத்தால் உயிர் விட்டனரோ? கூற்றுவனே இவர்கள் உயிர்களைக் கொள்ளைகொண்டாலன்றிப் பிறிதொருவரால் இவர்கட்கு இறுதி நேரிட்டிருக்கமாட்டா. வேறுயாதாயினுமாகுக. இனி, நமக்குள்ள நீர்வேட்கையை அகற்றிக்கொண்டு இதன்முடிவை ஆராய்தல்வேண்டுமென்று நீரைப்பருகத் தொடங்கினர்.

அப்பொழுது யக்ஷஸ் தருமபுத்ரரே! 'ஆராயாமல் ஒருகார்யத்தையும் தொடங்கற்க. நான் மீன் முதலியவைகளைக் கொன்று தின்று வாழ்நாளைப் போக்கும் பகன் என்னும் பெயரையுடையேன்; எனது வாக்யங்களைக் கேட்காததினால் உமது தம்பியர் நால்வரும் கூற்றின் வாய்ப்பட்டொழிந்தார்கள். ஆதலால் நீர் என் வினாக்கட்குத் தக்கபடி விடையளித்த பின்னரே இந்நீரைப் பருகவேண்டும்' என்று உரைத்தது. இவ்வுரைகளைக் கேட்ட தர்மபுத்திரர், ஒருவராலும் வெல்லமுடியாத என் தம்பிமார்களை இவ்வாறு செய்த உன்னை பகம் (கொக்கு) என்று எவ்வாறு சொல்வது? நீ ருத்ரர்களுள் ஒருவனா? அல்லது வஸுக்களில் ஒருவனா? இன்னானென்றறிய விரும்புகிறேனென்றார். பின்பு யக்ஷஸ், தருமபுத்ரரை நோக்கி யான் பறவையல்லேன்; ஒரு யக்ஷனாவேன். என்னால் உமது தம்பியர்கள் கொல்லப்பட்டார்கள் என்றது.

இக்கொடிய மொழிகளைக் கேட்ட தருமபுத்திரர் ஆச்சர்யமும் நடுக்கமும் ஒருங்கெய்தி அத்தடாகக் கரையின் ஒரு புறத்தில் யக்ஷன் பனைமரம்போல் நீண்ட உடலையும் க்ரூரமான பார்வையையுமுடையவனாய்த் தோன்றியதைக் கண்ணுற்றார். மறுமுறையும் அந்த யக்ஷஸ் மேக ஒலிபோல் முழங்கிக்கொண்டு தருமபுத்திரரை நோக்கி உமது தம்பிமார்களைப் பன்முறை வற்புறுத்தித் தடுத்தும் என்னுரைகளைப் பொருட்படுத்தாததினால் இந்நிலையடைந்தார்கள். நீரும் உயிர்வாழ வேண்டுமென்று கருதுவீரேல் நான் கூறும் வினாக்கட்கு ஏற்றபடி விடையளித்துஅதன்பின் இந்நீரைப் பருகக்கடவீர் என்றது.

தருமபுத்திரர் யக்ஷனே! இனியான் உனக்குரியதாயிருக்கிற இந்நீரை அருந்த விரும்பவில்லை. நீ இனிக்கேட்கும் வினாக்களுக்கு

என்னறிவுக் கெட்டிய மட்டில் விடையளிக்கிறேன்; மகிழ்ச்சியுடன் கேட்க வேண்டும் என்றார்.

பின்பு யக்ஷஸ் தர்மஸம்பந்தமான பலகேள்விகளைக் கேட்டது. அதற்குத் தருமபுத்திரர் தவறாது விடையளித்தார். யக்ஷஸ் மன மகிழ்ச்சியுற்றுத் தருமபுத்திரரைப் பார்த்து உமது தம்பிமார்களுள் எவனை விரும்புகிறீரோ அவனை எழுப்பித் தருகிறேனென்றது. தரு மபுத்திரர் நகுலனை எழுப்பித்தரவேண்டுமென்று வேண்டினார். யக்ஷஸ், பீமஸேனன் ஆயிரம் யானையின் பலம்படைத்தவனாகவும் அர்ச்சுனன் விற்போரில் இணையற்றவனாகவு மிருக்க இவர்களை நீர் உயிர்ப்பிக்க விரும்பாது நகுலனை மாத்திரம் எழுப்பித் தரும்படி விரும்பியதற்குக் காரணம் என்ன? என்று கேட்டது. தருமபுத்திரர், தருமத்தினாலே வாழவேண்டும். தருமத்தின் கேடே மனிதன் கேடா கும். ஆகலால் தருமத்தை ஒருபோதும் கைவிடலாகாது. மேலும் எல்லோரும் என்னைத் தருமசீலனாகவே எண்ணுகிறார்கள். அத்த கைய தருமத்தை ஒருபோதும் கெடுக்கமுயலேன். எனது தந்தை யருக்குக் குந்தி எவ்வாறு இஷ்டமான மனைவியாய் இருந்தனளோ அவ்வாறே மாத்திரியும் அவருக்கிஷ்டமான மனைவியாய் விளங்கி னாள். இவ்விருவரையும் யான் சமானமாகக் கருதினேனே யன்றி ஏற்றக்குறைவாகக் கருதினேனில்லை. குந்திக்கு யான் ஒருவன் இருந் திருப்பதுபோல மாத்திரிக்கும் அங்ஙனமே ஒருவன் விஞ்சியிருக்க வேண்டும் என்ற கருத்தால் நகுலனை எழுப்பித் தரல்வேண்டு மென்று விரும்பினேனே யன்றிப் பிறிதில்லை; என்றார்.

யக்ஷஸ் யுதிஷ்டிரரே! நீர்பொருள் இன்பங்களைக்காட்டிலும் தரு மத்தையே பெரிதாகக் கருதினீராதலால் உம்மை யான் பெரிதும் மெச்சுகிறேன். நீர் இனி ஒன்றிற்கும் அஞ்சவேண்டா உமது தம்பி மாரெல்லாம் இப்பொழுதே உயிர்பெற்றெழுவார்கள் என்றது.

உடனே வீமன் முதலான நால்வரும் தூங்கி விழித்தவர்களைப் போல எழுந்தார்கள். அவர்கட்குள்ள நீர்வேட்கையும் ஒழிந்தது. இந்நிலைகண்ட யுதிஷ்டிரர் பெருங்களிப்படைந்து யக்ஷஸ்ஸை நோக்கி என் தம்பிமார் ஒவ்வொருவரும் தன்னோடு எதிர்த்துப் போர் செய்வார் ஆயிரம் பெயராயினும் அவர்களையும் வெற்றி

கொள்ளும் ஆற்றலுடையவராவர். இத்தன்மையுடையவர் நால்வரையும் உயிர்துறக்கும்படி செய்து மறுபடியும் உயிர் பெற்றெழும்படி செய்தாய். இதனால் உனக்கு உயிர்களை ஆக்கி அளித்து அழிக்கும் வன்மை வாய்ந்திருக்கிறதென்பது தோன்றுகிறதே. இங்ஙனமிருக்கிற உன்னை ஒரு யக்ஷஸ்ஸாக மதிப்பது எப்படி? இது நிற்க; எங்களிடத்திற் பெரிதும் இரக்கம் வைத்தனையாதலால் எமக்கு மித்திரனாகவாவது தந்தையாகவாவது ஆகவேண்டுமென்று நம்புகிறோம்.

யக்ஷஸ் தருமபுத்திரரை நோக்கி நீ கருதியபடியே யான் உனது தந்தையாவேன். உன்னையும் உன்னிடத்தில் விளங்கும் குணவிசேஷங்களையும் காணுதற்கே இங்குவந்தேன். வாய்மை தூய்மை முதலிய தர்மங்களே எனது வடிவாகும்; அத்தகைய என் விஷயத்தில் நீ மிகுந்த பிரீதியைச்செலுத்தினை. தெய்வவசத்தினால் உனக்குத்தத்வ ஆராய்ச்சியில் விருப்பமும் அதற்கு மாறுயவற்றில் வெறுப்பு முடையவனாய் இருக்கின்றாய்; உன்னிடத்தில் விளங்கும் குணங்களைக்கண்டு மிகவும் மகிழ்வடைகிறேன்; உனக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள் என்றது.

தருமபுத்திரர் ரிஷியினுடைய அரணிக்கட்டையை மான் தூக்கிச்சென்றதினால் அவரது அக்கினி லோபமடையாதிருக்கும்படி பாதுகாத்தற்குரிய வரத்தைத்தரவேணுமென்றார். தர்மதேவதையும் அங்ஙனமே தந்தேன். இன்னும் இஷ்டமான வரத்தைக் கேட்பாய் என்றது. தருமபுத்திரர், நாங்கள் வனத்தில் வஸிக்கவேண்டிய பன்னிரண்டு வருஷங்களையும் ஒருவாறு கழித்து விட்டோம். இனி, ஒருவருஷம் அஜ்ஞாதவாஸம் செய்வதற்குரியவர்களாக இருக்கிறோம். அதுவும் ஒரு அரியசெயலாக இருக்கிறபடியால் அதற்குத்தகுந்த விடத்தை எங்கட்கு அமைத்துத்தரவேண்டும்; என்று கேட்டார். தர்மதேவதை, நீங்கள் உங்கட்குரிய வடிவுடன் சஞ்சரித்தாலும் உங்களை ஒருவரும் தெரிந்து கொள்ளமாட்டார்கள். ஆயினும் நீங்கள் விராடநகரஞ் சென்று உங்கட்கு இஷ்டமான வடிவங்களைத்தாங்கி அவ்விடத்திலே உறைவீர்களாக; என்றது. மேலும் அரணிக்கட்டையை மான் வடிவந்தாங்கி எடுத்துச் சென்றதும் யானே இந்த அரணிக்கட்டையையும் ரிஷியினிடத்தில்

கொடுத்துவிடுவீராக. உங்கட்கு இந்த வரங்களைக்கொடுத்த அளவில் திருப்தி பிறக்கவில்லை யாதலால் இன்னும் இஷ்டமான வரத்தைக் கேட்பீராக என்றது.

தர்மபுத்திரர் தர்மதேவதையை நோக்கித் தேவரீரது தர்சனத்தாலே நான் பெரும்பேற்றை பெற்றுவிட்டேன். நியமித்தபடி மற்றொரு வரமும் கேட்க முயல்கிறேன். எனது மனம் லோபம் மோஹம் முதலிய துர்க்குணங்களை விட்டு வாய்மை முதலிய நல்லறங்களில் எப்பொழுதும் பற்றுடைய தாயிருத்தல் வேண்டும் என்று கேட்டார்.

தர்மதேவதை, யுதிஷ்டிர! உனது தகுதிக்கேற்றவாறு இவ்வரத்தைக் கேட்டனை. இயல்பாகவே உன்பால் வாய்மை முதலிய நற்குணங்களெல்லாம் நிறைந்து விளங்குகின்றன. மேலும் இக்குணங்களெல்லாம் உன்னை விட்டு அகலாதிருக்கக் கடவன; என்று கூறி மறைந்தது.

அதன் பின்பு தர்மபுத்திரர் தம் தம்பிமார்களை அழைத்துக் கொண்டு மஹரிஷிகளின் ஆச்ரமம் வந்து அரணிக்கட்டையை அவரிடங் கொடுத்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று வாழ்ந்திருந்தார்.

இனி யக்ஷனுடைய கேள்விகளும், அவற்றிற்குத் தர்மபுத்திரர் அளித்த விடைகளையும் எழுதப்பெறும்.

தொடரும்.

ஸ்ரீ:

'அருள்கொண்டாடுமடியவர்' வ்யாக்யானம்.

[ஸ்ரீ வானமாமலை மடாதீனத்தின் உபயவேதாந்த வித்வானுயெழுந்தருளியிருந்த வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஆழ்வார், "உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும்வெற்றிலை யுமெல்லாங்கண்ணன்" என்று போக்யமாகச்சொன்ன கண்ணன் திருநாமத்திலும் ஆழ்வாருடைய நிரதிசயபோக்யமான திருநாமத்தைச் சொன்னால் என்னுடைய நாக்கில் அமிருதரஸம் மாறாமல் வர்த்திக்குமென்றார்; முதற்பாட்டில்.

இரண்டாம் பாட்டில் ஆழ்வார் தொண்டர்க் கமுதுண்ணச் சொன்ன திருவாய்மொழியையே பாடித்திரிவேனென்றார்.

மூன்றாம்பாட்டில் ஆழ்வார் முகமலர்ச்சி தோற்றும்படி அவருகந்த விஷயமென்று பொலிந்துநின்றபிரானுடைய கரியகோலத் திருவுருவைக் காண்பேனென்றார்.

நாலாம்பாட்டில் ஸாதுக்களான வைதிகோத்தமர்கள் என்னைப் புன்மையாகக் கருதாநிற்க, ஆழ்வார் ப்ரியமே நடத்தும் மாதாவுமாய் ஹிதமேநடத்தும் பிதாவுமாய் க்ருபை பண்ணினார் என்றார்.

ஐந்தாம்பாட்டில் ஆத்மாபஹாரியாய் விஷயப்ரவணனான நான் அந்த விஷயாநுபவத்துக்குப் பொருள்தேடிச் செம்பொன் மாடத் திருக்குருகூரில் சென்றேன்; ஆழ்வார் தமக்கே என்னை அன்பனாக்கிக்கொண்டாரென்றார்.

ஆறாம்பாட்டில் ஆழ்வார் ஏழுமுறையாகத் தம்முடைய கல்யாண குணங்களையே பாடித்திரியும்படி என்திறத்தில் க்ருபை பண்ணினாரென்றார்;

ஏழாம்பாட்டில் என்னுடைய அநாதியான கொடுவினைகள் தூறுமண்டும்படி ஆழ்வார் என்திறத்திற் பண்ணின க்ருபையை "நான் பெற்ற பேறுநாலூராரும் பெறவேணும்" என்றாற்போலே பரஸம்ருத்யைக ப்ரயோஜனரான இவரும் (மதுரகவிகள்) நாட்டாரும்பெற்று உஜ்ஜீவிக்கும்படி எட்டுத்திக்குகளிலுள்ளாரும் அறியச் சொல்லுகிறேனென்றார்.

எட்டாம்பாட்டு 'அருள்கொண்டாடும்' அத்தை உபபாதிக்கிறார் இப்பாட்டில். இப்பாட்டே இப்பிரபந்தத்துக்கு உயிர்ப்பாட்டாயிருக்கும் உபபாதிக்கிறபடிதான் என்னென்னில்;

இவர்தாம் முதலில் கவிக்கு நிறைபொருளாய் 'நின்றனை நேர்பட்டேன்' என்கிற பகவத் விஷயத்தை விட்டுத் ததீயசேஷத்வத்தில்

நின்று ஸ்வாசார்யரான நம்மாழ்வார் விஷயமாகக் கவிபாடுகிறார். அதுக்கடி என்னென்னில்; "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍" தாமஜ்ஞ ஸமய: ப்ரமாணம்: "𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃" "யத்யதாசரதிச்ரேஷ்ட:" என்கிறபடியே ஆசார்ய ருசிபரிக்ருஹீதமான அர்த்தமே ஸாத்விகர்க்குப் பரிக்ராஹ்யமாகையாலே ஸ்வாசார்யரான நம்மாழ்வார் 'பொய்நின்ற ஞானம்' தொடங்கி 'அவாவற்று வீடுபெற்ற' அளவும் நாலு ப்ரபந்தம் அருளிச் செய்ததில் அவர் தமக்குப் புருஷார்த்தகாஷ்டையாக அபிமதித்த ததீயசேஷத்வத்தையே பற்றி இவரும் கவிபாடுகிறார். ஆசார்யன் அபிமதித்த அர்த்தமே உத்தேச்யம் என்னுமிடம் எங்கே கண்டோமென்னில்;

ஸ்ரீபீஷ்மர் தர்மபுத்ரருக்கு ஸஹஸ்ரநாமாத்யாயத்தை உபதேசித்ததையும், த்ரிபுராதேவியார் வ்ருத்தாந்தத்தையும் த்ருஷ்டாந்தமாக முன்க்ரந்தங்களிற் கண்டிருக்கிறது. அவை வருமாறு காண்க.

பாரத ஸமரத்தில் அர்ஜுன சரத்தாலே அடிபட்டு சரதல்பத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற பீஷ்மர் "𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌵𑌾𑌤𑌿𑌥𑌿𑌮𑍍" க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்" என்று உத்தராயணத்தை ப்ரதீக்ஷித்து" "𑌉𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍍𑌯𑌾𑌧𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌃, 𑌅𑌨𑍃𑌣𑍋𑌹𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍" "உபதிஷ்டந்து மாம் ஸர்வே வ்யாதய:பூர்வஸஞ்சிதா:, அந்ருணோஹம்கமிஷ்யாமி தத்விஷ்ணோ: பரமம்பதம்." என்று தம்முடைய முக்தி ப்ரதிபந்தகமான ப்ராரப்தகர்மபலரூகமான துக்கத்தை அநுபவித்து முக்தியுன்முகனான க்ருஷ்ணன் திருவடிகளைத் த்யானித்துக்கொண்டிருக்கிற அளவில் ஸ்ரீக்ருஷ்ணனும் இஃதறிந்து "𑌶𑌰𑌤𑌲𑍍𑌪𑌗𑌤𑍋 𑌭𑍀𑌷𑍍𑌮𑌶𑍍𑌶𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃, 𑌮𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌸𑍍𑌤𑌤𑍋 𑌮𑍇 𑌤𑌦𑍍𑌗𑌤𑌂 𑌮𑌨𑌃" "சரதல்பகதோபீஷ்மச்சாம்யந்நிவஹுதாசந:,மாம் த்யாதி புருஷவ்யாகரஸ்ததோ மேதத்கதம்மந:" என்று பீஷ்மரையே நினைத்து ஸந்நிஹிதரான யுதிஷ்டிரரைப்பார்த்து "𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌭𑍀𑌷𑍍𑌮𑍇 𑌕𑍌𑌰𑌵𑌾𑌣𑌾𑌂 𑌧𑍁𑌰𑌨𑍍𑌧𑌰𑍇, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌲𑍍𑌪𑍀𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌚𑍋𑌦𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍" "தஸ்மிந்நஸ்தமிதேபீஷ்மே கௌரவாணாந் துரந்தரே, ஜ்ஞாநாதல்பீ பவிஷ்யந்தி தஸ்மாத் வாஞ்சோதயாம்யஹம்," என்று உங்கள் குலத்துக்கு ப்ரதானராய் ஜ்ஞாநநிதியான

பீஷ்மர்மோக்ஷத்தைப்ராபிக்கும்அளவானார். ஸூர்யன் அஸ்தமித்த வாறே இருளெங்கும் புக்குப் பரவுமாபோலே ஜ்ஞாநம் குறைந்து அஜ்ஞாநம் எங்கும் நிரம்புமாதலால், அவர்பாடே சென்று நிதி யெடுப்பாரைப்போலே அவர் பக்கலுள்ள ஜ்ஞாநத்தை க்ரஹித்துக் கொள்ளும்; என்று ஏவ அவருமப்படியே சென்று பீஷ்மர் பக்கல் “ஶ்ருத்வா தர்மாநஶேஷேண” ‘ச்ருத்வா’ தர்மாண்ய சேஷேண என்று தேவரீர் புருஷார்த்தமாக அபிமானித்த அர்த்தம் எதுவோ? அதையே அடியேனுக்கு உபதேசிக்கவேண்டும்; என்ன அவருமப் படியே “[illegible]” “ஏஷமே ஸர்வ தர்மாணாம் தர்மோதிகதமோமத: விஷ்ணோர்நாமஸஹஸ்ரம்மேச் ருணுபாபபயாபஹம்” என்று தாம் புருஷார்த்தமாக அபிமானித்த ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமாத்யாயத்தை உபதேசித்தாரிறே.

இன்னும் பட்டர் விருத்தாந்தத்தையும் நிதர்சநமாகக்கொள்ள லாம். அதாவது:- பட்டர்ஸந்நிதியில் சாஸ்திரார்த்தம்கற்ற ஒரு வித் வான் தினந்தோறும் வருவான். அப்படியே ஸாது ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரும் வருவர். பட்டர் அந்த வித்வானை கௌரவியாமல் தாழ்ந்த சொற்களாலே வ்யவஹரித்துப்போருவர். ஸாது ஸ்ரீவைஷ்ணவர் வரும்போதெல்லாம் போர கௌரவித்தருளுவர். இதைக்கண்ட ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் எங்கும் ப்ரஸித்தனான வித்வானை அகௌர விக்கவும், எளியரான ஸ்ரீவைஷ்ணவரை கௌரவிக்கவும் காரணம் ஏதென்று பட்டர் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய அதுதெரியாதோ நாளை யிருவரும் வருங்காலத்தில் காட்டுகிறோமென்று நியமித்து மறுநாள் இருவரும் வந்தபோது வித்வானை நோக்கி இதுநாள்வரை நீ கற்ற சாஸ்திரங்களால் அறிந்த தத்தவம் எது? என்ன; அவனும் கூழையும், பிசுனும் கலந்தாப்போலே சிலவற்றைச் சொல்ல ஸ்ரீ வைஷ்ணவரைக்கேட்க, திவ்யமங்கள விக்ரஹயுக்தனாய், கல்யாண குணபரிபூரணனாய்ச்சயனித்துக்கொண்டிருக்கிறநம்பெருமாளென்ன; இன்னும் நினைத்திருப்பதேதென்ன எம்பெருமானார் திருவடிகளே; தஞ்சமென்று நினைத்திருப்பேனென்ன நீர் இஃதறிந்தபடி என் கொண்டென்ன தேவரீர் நியமனங்கொண்டென்ன ஸந்நிதி [சமீபத் திலிருந்த] ஸ்ரீவைஷ்ணவரைப்பார்த்து இருந்தபடிகண்டாயே என்றருளிச்செய்தார். (தொடரும்.)

ஸ்ரீ:

ஐயவினாக்கள்.

அடியிற்கண்ட ஸம்சயங்களைப் பண்டிதர்கள் நன்குஆராய்ந்து தெளிவாய் எடுத்துரைப்பார்களென்ற கருத்தால் இவை இங்கு எழுதப் பெறுகின்றன.

சந்திரன் க்ஷீராப்தியிலிருந்து உண்டாவதற்கு முன் இராக்காலமெல்லாம் இருளாகவே இருந்தனவா? மேலும் அச்சந்திரனுக்குச் சாபம் ஏற்படுவதற்கு முன் அவன் பூர்ணகலையுள்ளவனாக விளங்கினானா? அப்படியானால், அமாவாஸ்யைதிதி ஏற்படாதிருத்தல் வேண்டுமே? சந்திரனுடைய பட்டத்தை வஹிக்கும் சாபமடையாத வேறு சந்திரனுக்கும் க்ஷயமுண்டா?

இந்திரன் ஸஹஸ்ராக்ஷன் [ஆயிரங்கண்ணன்.] என்று வேதத்தாற் சொல்லப்படுகிறான். இந்திரப்பட்டங்களை வஹித்தவர்களில் ஒருவன் கௌதம சாபத்தாலன்றோ ஆயிரங்கண்ணையுடையவனானான் அங்ஙனமிருக்க வேதம்பொதுவாக இந்திரனுக்கு ஸஹஸ்ராக்ஷனென்று பெயரிட்டதற்குக் காரணம் என்ன? எல்லா இந்திரர்களும் இவ்வாறு சாபத்தைப்பெற வேண்டுமென்ற நியதியுண்டா? அங்ஙனமானால் யுக்திக்குப் பொருந்துமாறெங்ஙனம்?

திருவாய்மொழி முதற்பத்து ஐந்தாம் திருவாய்மொழி ஆறாம் பாட்டில் "வினையேன் வினைதீர்மருந்தானைப்" என்பதற்கு ஆறாயிரப்படி வ்யாக்யானத்தில் "உன்னோடு ஸம்ச்லேஷிக்கைக்கு விரோதியான என்னுடைய அநர்ஹதாநுஸந்தானமாகிற வினையைப் போக்கின ஸௌசீல்யத்தை யுடையவனே" என்று பொருளுரைக்கப்பட்டுளது. இங்கு வினையைப் போக்கின ஸௌசீல்யத்தை யுடையவனே என்ற இறந்தகால ஸம்போதனத்தால் இதற்கு முன் ஈசுவரன் அப்படிப்பட்ட ஸௌசீல்யத்தையுடையவனாய்க்கொண்டு ஆழ்வாருக்கு க்ருபை செய்திருப்பதாகத் தோன்றுகிறது. இத்தகைய ஈசுவர ஸௌசீல்யத்தை ஆழ்வாரெவ்வாறு அநுபவித்தாரென்பதைத் தெளிவாக முன்புள்ள ஸ்ரீஸூக்திகளால் அறிந்துகொள்ளுமாறெங்ஙனம்?

ஷை திருவாய்மொழி ஐந்தாம்பாட்டில் "கூனே சிதைய வுண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா" என்பதற்கு

முப்பத்தாறுயிரப்படி வ்யாக்கியானத்தில் "வநவாஸஹேதுபூதை யான குப்ஜையைச் சொல்லிற்றுப்; பால்யத்திலே சுண்டுவிற் கொண்டு திரியாநிற்கப் பெருமாள் லீலாரஸம் அநுபவித்தாரென் றுண்டு. அப்போது 'கோவிந்தா' என்கிறது- பூமிக்கு ரக்ஷகனான வனே என்கிறது. அன்றிக்கே தீம்புசேருவது கிருஷ்ணனுக் கேயாகையாலே போம்பழியெல்லாம் அமணன் தலையோடே என்னுமாபோலே அவன் தலையிலே ஏறிட்டுச்சொல்லுதல்," என்று பொருளுரைக்கப்பட்டுளது. இங்கு 'கூனே சிதைய வுண்டைவில் நிறத்தில் தெரித்தாய் கோவிந்தா' என்பது சக்கரவர்த்தித்திரு மகனையுணர்த்துமெனக்குறித்து, இரண்டாவது பக்ஷமாக கிருஷ் ணனையும் சுட்டிக்காட்டும் என்று சொல்லப்பட்டது. இங்கு, தீம்பு சேருவது க்ருஷ்ணனுக்கேயாகையாலே, என்றதனால் சக்கரவர்த்தித் திருமகன் விஷயமாக உரைத்த தீம்பை விலக்குதற்காக உரைத்த தாகத் தோற்றுகிறது. அப்படியானால் சக்ரவர்த்தித்திருமகன் செய்த தீம்பு என்ன? தீம்பு க்ருஷ்ணனுக்கு மாத்திரம் எப்படிச் சேரும்? அப்படிச்சேர்ந்தால் அமணன் உபாக்யானம் எவ்வாறு திருஷ்டாந்தமாகப் பொருந்தும்? மேலும் சக்ரவர்த்தித்திருமகன் செய்தது தீம்பாக விருக்கும் பக்ஷத்தில் அவர் செய்ததாக உரைத் தாலென்ன? வ்யாக்யாதா பிறர் பக்ஷத்தை மேற்கொண்டு இவ்வா றுரைத்தாரென்றாலும் இரண்டு பக்ஷமும் பெரியோர்களுடைய அபிப்பிராயமாயிருக்கிறபடியால், இரண்டாவது பக்ஷத்தில் உண் டாகிய ஸம்சயத்தையும் நீக்கிக்கொள்ள வேண்டுவதும் அவசிய மாகும். ஒருவரே இரண்டு விதமாகப் பொருள் செய்து பின் ஒன்றை நீக்கி மற்றொன்றைக் கொள்வதென்பதும் முறையாகாது.

இதுநிற்க, இங்கு வ்யாக்யாதா க்ருஷ்ணனுக்கு வில்லில்லை யாதலால் க்ருஷ்ணபரமாக அர்த்தஞ்செய்வது உசிதமன்றெனக் கொண்டு சக்ரவர்த்தித்திருமகன் விஷயமாக அர்த்தம் அருளிச் செய்து அதற்குப் பொருத்தமாக வனவாஸஹேதுபூதையான கூனி யின் வ்ருத்தாந்தத்தையும் எடுத்துக்காட்டினர். அதன்பின் சக்ர வர்த்தித்திருமகன் விஷயமாக அருளிச்செய்ததில் மனக்களிப் பில்லாமையால் பிறர் பக்ஷத்தை அநுஸரித்து க்ருஷ்ணபரமாகக் கூறினர். இப்பக்ஷத்திலுண்டாகும் ஸம்சய நிவிர்த்திக்கு க்ருஷ் ணனுக்கு வில் உண்டு என்பதற்கு "வேவிக்கோல் வெட்டி விளை யாடும் வில்லேற்றி" என்று ப்ரமாணங்காட்டினர் 'வில் நிறத்தில்

தெறித்தாய் சேஷிந்தா' என்பதற்கு வருத்தமறச்சுண்டுவில் நிமிர்க்குமா போலே நிமிர்த்தவனென்னுதல் என்று மற்றோர் அர்த்தமும் சொல்லப்பட்டுளது. இவ்விருத்தாந்தம், புராணங்களில் இதற்கு நேர்விரோதமாக, கூனியின் மோவாய்க்கட்டையைப் பிடித்துத் திருவடிகளால் நிமிர்த்ததாகச் சொல்லப்பட்டுளது. ஆழ்வார் திவ்ய ஸூக்தியில் புராணங்களில் காணப்படாத விஷயத்தைச் சொல்லக் கூடுமானாலும், இருக்கிற விஷயத்துக்கு விரோதமாயிருக்குமாகில் அதை நிரூபித்துரைப்பது எப்படி? இன்னும் சிலர் அமணன் உபாக்கியானம் ஒருவன் செய்ததை மற்றொருவனுக்கு ஏறிடுவதற்கு மட்டும் திருஷ்டாந்தமாமேயன்றிப் பூர்ணதிருஷ்டாந்தத்தை உத்தேசித்துச் சொல்லப்படவில்லை; என்று ஸமாதானஞ் சொல்லுகிறார்கள். அமண; உபாக்கியானத்திற் கண்ட திருடனை 'உண்மையாக ஒருவன் நேரில் கொல்லவில்லை. அமணன் மீது ஏறிட்டுக்கூறியதும் உண்மையில்லை. ஆகையால் அவர்கள் கூறுவதும் பொருந்தாது.

பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த தத்வத்ரயத்தில் ஈசுவர ப்ரகரணத்தில் "ஸ்திதியில் விஷ்ணுவாதிரூபேண அவதரித்து" என்பதற்கு "அதாவது ஸ்திதியில் வந்தால் "𑌮𑌧𑍍𑌯𑍇𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿𑌗𑌿𑌰𑌿𑌶𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌵𑌤𑌾𑌰𑌂" "மத்யேவிரிஞ்சிகிரிசம் ப்ரதமாவதாரம்" என்கிற விஷ்ணு அவதாரம் தொடக்கமாக" என்று வ்பாக்யானஞ் செய்யப்பட்டுளது. இந்த அவதாரமானது ஈசுவரஸ்வரூபம் ஐந்திற் சேர்ந்ததா? சேராததா? விஷ்ணு அவதாரஸ்வரூபம் எப்படிப்பட்டது?

ஷை ஈசுவரப்ரகரணத்தில் "ஈசுவரஸ்வரூபந்தான் பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரமென்று ஐந்து ப்ரகாரத்தோடு கூடியிருக்கும். அதில்பரத்வமாவது:— நித்யமுக்தருக்குப் போக்யனாய்க்கொண்டு எழுந்தருளியிருக்கு மிருப்பு. வ்யூஹமாவது:—ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தரூபேண நிற்கும் நிலை. அந்தர்யாமியாவது:- ஹ்ருதயகமலத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பு. அர்ச்சாவதாரமாவது:--கோயில்களிலும், க்ருஹங்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலை." என்று சொல்லப்பட்டுளது. இங்கு, பரத்வம், வ்யூஹம் என்ற இரண்டிற்கும் எழுந்தருளியிருக்குமிருப்பு என்ற வினைமுடிவும், வ்யூஹம், அர்ச்சாவதாரம் என்ற இரண்டிற்கும் நிற்கும்நிலை என்ற வினைமுடிவுமிட்டுக்கூறுதற்கும் பிரயோஜனம் யாது? என்று ஹரிசமயதிவாகரப் பத்திராதிபரைச் சந்தித்த காலத்திற் கேட்டேன்.

அதற்கு, அவர் இங்கு நில் என்னும் பகுதியடியாகப் பிறந்த வினைச்சொல் "நிலைநின்ற தவமிதுகொல்" என்றும், "நிலையாக நிற்கிறான்" என்றுமுள்ள செய்யுள்வழக்கிலும், உலகியல்வழக்கிலும் ஒன்றைப்பெற விரும்புவான் முயலும் தொழிலைக் குறித்துநிற்கக்காண்கிறோம். க்ஷீராப்தியில் அறிதுயிலமரும் எம்பெருமான் பிறர் முறையிடுவதைக்கேட்டு அவர்கட்கு அநுக்ரஹம் செய்துகொண்டிருப்பதோடு லோகரக்ஷணத்திலும் எப்பொழுதும் கண்வைத்துக்கொண்டிருக்கிறானாதலால், தான் விரும்பியவற்றைப் பெறுவதற்கு எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சாதனபரனாயிருக்கின்றானென்பது தோற்றுகின்றது. "நின்றதெந்தை ஊரகத்து இருந்ததெந்தை பாடகத்து, அன்று வெஃகணைக்கிடந்த தென்னிலாத முன்னெலாம்" என்று திருமழிசைப்பிரான், அர்ச்சாவதார எம்பெருமான் சேதனர்களைக் கைக்கொள்வதற்குப் பல திவ்யதேசங்களில் எழுந்தருளியிருந்து சாதனானுஷ்டானஞ் செய்கிறான் என்று அருளிச்செய்தார். இவ்விருவவதாரங்களைக் கொண்டுள்ள எம்பெருமான் விரும்பிய பொருளையடையவிருப்பார் ஸாதநாநுஷ்டானஞ் செய்வதுபோல் சேதனர்களைக் கைக்கொள்வதிலே முழுநோக்குடையவனாயிருக்கிறானென்பதைப் புலப்படுத்த "நிற்கும் நிலை" என்று அருளிச்செய்தார்.

இரு என்னும் பகுதியடியாகப் பிறந்தசொல், "வீற்றிருந் தேழுலகும் தனிக்கோல்செல்ல" என்றும் " தன்பெருமை தோற்ற விருக்கிறான்" என்றுமுள்ள செய்யுள் வழக்கினும் உலகியல் வழக்கினும் தன்புகழ்தோன்ற இருப்பானது தொழிலையுணர்த்திநிற்கக்காண்கின்றோம். பரமபதத்தில் எம்பெருமான், ஒத்தாரும் மிக்காருமில்லாதவனாய் நித்பமுக்த குழாங்கள் தன்னைப்புடைசூழ உயர்வுதோற்ற இருக்கின்றானாதலால், 'எழுந்தருளியிருக்கும் இருப்பு,' என்றவினைச்சொல்விட்டு அருளினார்; என்று கூறினார். அவருரைத்தது பொருத்தமாக விருந்தாலும் ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமாக ஹ்ருதயகமலத்தில் ஸேவை ஸாதிக்கிற எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும் நிற்கும்நிலை என்று அருளிச்செய்யாமல் பரத்வம்போல எழுந்தருளியிருக்குமிருப்பு என்று ஸாதித்திருப்பதற்கு ஸமாதானம் வேண்டும்.

வே. இராமாநுஜையங்கார்.

சேரன்குளம்.